
விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, வைகாசி - 26 புதன் 09.06.2021 மலர் - 2, இதழ் - 64

# தடுப்பூசி அரசியலுக்கு முற்றுப்புள்ளி


கொரோனா தடுப்பூசி குறித்து சந்தேகம் தெரிவித்த காங்கிரஸ், திருணமூல், விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட பல எதிர்கட்சியினர் பின்னர் சத்தமில்லாமல் சென்று தடுப்பூசி போட்டுக்கொண்டனர். தாங்கள் ஆளும் மாநிலத்தில் தடுப்பூசியை வைத்து மலிவான அரசியல் வியாபாரம் செய்தன காங்கிரஸ், சமாஜ்வாதி உள்ளிட்ட எதிர்கட்சிகள். ஆனால் பிரதமர் மோடி, தனது உரையில் மாநிலங்களுக்கு தடுப்பூசிகள் இலவசமாக வழங்கப்படும் என அறிவித்தார். இதனால், இவர்களின் மலிவான அரசியல் சித்துவிளையாட்டுகள் முடிவுக்கு வந்துள்ளது.

தடுப்பூசியை தனியாருக்கு விற்று லாபம் பார்த்த பஞ்சாப்பை ஆளும் காங்கிரஸ் அரசின் ஊழலுக்கு முடிவு கட்டப்பட்டது. நங்கள் தனியாக தடுப்பூசி வாங்கிக் கொள்கிறோம் என பேசி அரசியல் செய்த டெல்லியை ஆளும் ஆம் ஆத்மி, தமிழக தி.மு.க, மமதா பானர்ஜி தலைமையிலான திருணமூல் காங்கிரஸ் உள்ளிட்டோரின் தடுப்பூசி அரசியல் முடிவுக்கு வந்தது. ராஜஸ்தானிலும் ஜார்கண்டிலும் காங்கிரஸ் கட்சியும் அதன் கூட்டணி கட்சிகளும் செய்த தடுப்பூசி வீணாக்குதல், பதுக்கல்கள் இனி காணாமல் போகும். மமதா கட்சியினர் அச்சடித்துக் கொடுத்த போலி தடுப்பூசி சான்றிதழுக்கு முடிவு கட்டப்பட்டது. மகாராஷ்டிராவில் உத்தவ் தாக்கரேவின் பழிபோடும் அரசியல் நிறுத்தப்பட்டது. கம்யூனிஸ்ட்டுகளின் டூல் கிட் அரசியல் முடிவுக்கு வந்தது. எதிர்கட்சிகளை வைத்து அமெரிக்க பைசர் நிறுவனம் நடத்திய அரசியல் விளையாட்டுகள் முடித்து வைக்கப்பட்டன. தடுப்பூசி குறித்த எதிர்மறை செய்திகளை மக்கள் மனதில் விதைத்து பிழைப்பு நடத்திய சார்பு ஊடகங்களின் பிரச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி என அனைத்து தடுப்பூசி அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார் பிரதமர் மோடி.



# நூலகங்களில் தி.மு.க. ஆதரவு பத்திரிகை

தமிழகத்தில் திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டு வாரங்களுக்குள் சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் கீழ் இருக்கும் 121 நூலகங்களிலும் ஜூன் 1ம் தேதி முதல் அடுத்த ஆண்டு மார்ச் 31ம் தேதி வரை முரசொலி நாளிதழை வாங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. தற்போது, தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கு உட்பட்ட அனைத்து கிராம ஊராட்சிகளில் உள்ள நூலகங்களிலும், ஆண்டு சந்தா செலுத்தி தி.மு.கவின் அதிகாரப்பூர்வ நாளிதழான முரசொலி மற்றும் தி.மு.க ஆதரவு ஏடுகளான தினகரன், குங்குமம், தமிழ் முரசு ஆகிய பத்திரிகைகளை மட்டும் வாங்கவும், அதற்கான ஓராண்டு சந்தாவை முன்கூட்டியே செலுத்தவும் ஆணையிடப்பட்டுள்ளது. இதற்கு பத்திரிகையாளர்கள், பொதுமக்கள், அரசியல் கட்சியினர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். நூலகங்களில் வாங்கப்படும் வார இதழ்கள், மாத இதழ்கள் உள்ளிட்ட பத்திரிகைகள், செய்தித்தாள்கள் அதற்கான சந்தா, விளம்பரம் ஆகியவற்றில் தமிழக அரசு எவ்வித பாகுபாடும் காட்டக்கூடாது. தமிழக அரசு இது குறித்து விசாரித்து உடனடியாக நடவடிக்கை எடுப்பதுடன் இப்படி ஒருதலைபட்சமாக அறிவிப்பு வெளியிட காரணமாக இருந்தவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. முதல்வர் இது குறித்து சிந்திப்பாரா?




# தடுப்பூசி வழிகாட்டு நெறிமுறை வெளியீடு

மத்திய அரசின் புதிய தடுப்பூசி கொள்கை வரும் ஜூன் 21 அன்று அமலாக உள்ள நிலையில், கொரோனா தடுப்பூசிகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. அதன்படி, 'மக்கள் தொகை எண்ணிக்கை, கொரோனா பாதிப்புகளின் அடிப்படையில் மாநிலங்களுக்கு தடுப்பூசி ஒதுக்கப்படும். தடுப்பூசிகளை மாநிலங்கள் வீணடித்தால் ஒதுக்கப்படும் எண்ணிக்கை குறைக்கப்படும். தனியார் மருத்துவமனைகள் சரியான விலையில் தடுப்பூசி செலுத்துவதை மாநில அரசுகள் கண்காணிக்க வேண்டும்' என மத்திய அரசு மா நில அரசுகளை அறிவுறுத்தியுள்ளது.



# பாரத மயமாகும் பாரத ராணுவம்



நீண்ட காலமாக நமது பாரத ராணுவம், பிரிட்டிஷ் பாரம்பரியத்தை பின்பற்றி வருகின்றன. பேன்ட் வாத்தியங்கள், அணிவகுப்பு என பல்வேறு இடங்களில் இந்தத் தன்மை வெளிப்படும். அணிவகுப்பு விழாக்களின் போது இசைக்கப்படும் பல பாடல்கள் பிரிட்டிஷ் பாரம்பரிய பாடல்கள். அதிகாரிகளின் உணவு முறைகளில் பல ஆங்கிலேய கலாச்சாரத்தை அப்படியே பிரதிபலிக்கும். அதிகாரிகளுக்கான பயிற்சிகளின்போதுகூட, பிரிட்டிஷ், ஜெர்மானிய, சோவியத் ஜெனரல்கள், அலெக்சாண்டர், நெப்போலியன் போன்ற பேரரசர்களின் வியூகங்கள்தான் அதிகமாக பயிற்றுவிக்கப்படுகின்றன. இந்நிலையில், தற்போது நமது பண்டைய பாரத அரசர்கள், குறிப்பாக சோழ பேரரசர்களின் கடற்படை வியூகங்கள், மராட்டிய பேரரசர் சிவாஜியின் நுணுக்கங்கள், சானக்கியர் எழுதிய அர்த்த சாஸ்திரம் போன்ற நூல்களுக்கு முக்கியத்துவம் அளிக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. இதை தவிர பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் வழங்கப்பட்ட சில பாராட்டு பட்டங்களை விலக்கவும் பணிகள் நடைபெற்று வருகின்றன என தகவல்கள் தெரிவிக்கின்றன. இது குறித்து மேஜர் ஜெனரல் பிரேந்தர் தனோவா பேசுகையில், 'உலகம் முழுவதும் ராணுவங்கள் நவீன போர் முறை மற்றும் சொந்த கலாச்சரங்களை இணைந்தே பின்பற்றி வருகின்றன, அதே நேரத்தில் இந்த மாற்றம் அரசியல் ரீதியான ஒன்றாக இருக்கக் கூடாது' என கருத்து தெரிவித்தார்.

# மோசடி வழக்கில் காந்தியின் கொள்ளுப்பேத்தி



மகாத்மா காந்தியின் கொள்ளுப் பேத்தியும் சமூக ஆர்வலரான எலா காந்தியின் மகளுமான ஆஷிஷ் லதா ராம்கோபின், தொழிலதிபர் எஸ்.ஆர்.மஹாராஜை 6.6 மில்லியன் ரேண்ட் மோசடி செய்தது, போலி ஆவணங்கள் சமர்ப்பிப்பு உள்ளிட்ட வழக்கில் தென் ஆப்பிரிகாவின் டர்பன் நீதிமன்றத்தால் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளார். மேலும், தண்டனையை எதிர்த்து மேல்முறையீடு செய்யவும் வெளியே விடவும் டர்பன் சிறப்பு வணிக குற்ற நீதிமன்றம் மறுத்துவிட்டது. மகாத்மா காந்தியின் இரண்டாவது மகன் மணிலால் காந்தியின் மகளான எலா காந்தியின் மகள் லதா ராம்கோபின் என்பது குறிப்பிடத்தக்கது.

# விண்ணில் பறக்கும் சிமெண்ட்



கொரோனா தொற்றால் தமிழகத்தில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது தளர்வுகள் தரப்பட்டுள்ளன. இதனால், விற்பனை மந்தமான நிலையில் இருந்த சிமெண்ட் விலை, தற்போது மீண்டும் உயர்த்தப்பட்டுள்ளது. 440 ரூபாயக இருந்த சிமெண்ட் மூட்டை, தற்போது 500 ரூபாய்க்கு விற்பனையாகிறது. வேறு எந்த மாநிலத்தில் இல்லாத வகையில் தமிழகத்தில் சிமெண்ட் விலை உயர்த்தப்பட்டுள்ளது கட்டுமானத்துறையினர் மட்டுமல்ல வீடு கட்ட நினைக்கும் மக்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இதற்கு உற்பத்தியாளர்களை அழைத்துப் பேசி, விலையை உடனடியாகக் கட்டுப்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கட்டுமானத் துறையினரும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பொய் சொல்லி பிடிப்பட்ட சிதம்பரம்




'கொரோனா தடுப்பூசிகளை மத்திய அரசுதான் மொத்தமாக வாங்கி மாநில அரசுகளுக்குத் தர வேண்டும். எந்த மாநில அரசும் தாங்களே தடுப்பூசியை வாங்கிக்கொள்கிறோம் என கூறவில்லை' என தனது டுவிட்டரில் பதிவிட்டிருந்தார் முன்னாள் ரீகௌண்டிங் மினிஸ்டரான ப.சிதம்பரம். இதற்கு உடனே நாங்கள் தடுப்பூசிகளை வாங்க மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் என மமதா பானர்ஜி, பிரதமருக்கு எழுதிய கடிதம், மாநில அரசுகளை மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் என்ற ராகுலின் கடிதம், தமிழக அரசின் டெண்டர் என அனைத்து விஷயங்களையும் நெட்டிசன்கள் ஆதாரத்துடன் அவருக்கு எதிராக பதிவிட்டனர். இதனால், வேறு வழியின்றி நான் திருத்திக்கொள்கிறேன் என பதிவிட்டுள்ளார் ஐஎன்எக்ஸ் மீடியா வழக்கில் கைதாகி தற்போது ஜாமீனில் வெளியில் உள்ள முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம்.

## தி.மு.க.வினர் திருடிய கருங்கற்கள்



திருச்சி, சோபனாபுரத்தில் கிராம பஞ்சாயத்து அலுவலகக் கட்டுமானத்துக்கு கொண்டுவரப்பட்ட கருங்கற்களில் மீதமுள்ள ரூ. 2 லட்சம் மதிப்புள்ள கற்கள், கட்டடத்தின் எதிரில் உள்ள அரசு காலி நிலத்தில் கொட்டி வைக்கப்பட்டிருந்தன. அப்பகுதியைச் சேர்ந்த தி.மு.க ஒன்றிய கவுன்சிலர் ராமச்சந்திரன், பஞ்ஞாயத்துக் கவுன்சிலர் ஆபிதா பானுவின் கணவர் சவுகத் அலி ஆகியோர் துணையுடன் கற்களை சிலர் டிராக்டர் மூலம் கொண்டு சென்றுள்ளனர். வடக்கு மாவட்ட தி.மு.க இளைஞரணி துணை அமைப்பாளர் சோபா கண்ணன் தூண்டுதலின் பேரில்தான் கற்கள் திருடப்பட்டுள்ளன. திருடியவர்கள் தி.மு.கவினர் என்பதால் தற்போதைய தலைவர் கண்டுகொள்ளவில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். இது குறித்து, சோபனாபுரம் பஞ்சாயத்து முன்னாள் தலைவர் திருப்பதி, காவல்துறையில் புகார் அளித்துள்ளார்.

## தடுப்பூசி பிரச்சார வாரம்



கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்டால் மட்டுமே கொரோனா தொற்றிலிருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ளலாம் என்ற கொரோனா தடுப்பூசி குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த, ஒரு வார காலம் "தடுப்பூசி பிரச்சார வாரமாக" கடைபிடிக்க வேண்டும் என கொரோனா விழிப்புணர்வு குறித்த கணொளி கூட்டத்தில், புதுச்சேரியின் துணை நிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தர்ராஜன் தெரிவித்துள்ளார்.

# அமைச்சரின் கண்ணியக் குறைவான பதில்

தஞ்சாவூரில் பத்திரிகையாளர்களை சந்தித்த வேளாண்மைத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வத்திடம், செய்தியாளர் ஒருவர், ``கடந்த ஆட்சியில் நெல் கொள்முதலுக்கு மூட்டைக்கு ரூ.40 லஞ்சம் வாங்கப்பட்டது. அது இப்போது ஒழிக்கப்படுமா என்ற ரீதியில் கேள்வி எழுப்பினார். அதற்கு அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் "நீ இப்படி கிறுக்குத்தனமாகக் கேள்வி கேட்டால், நானும் கிறுக்குத்தனமாகத்தான் பதில் சொல்ல வேண்டியதிருக்கும்" மிகவும் கண்ணியக் குறைவாக பதில் அளித்துள்ளார். இது பத்திரிகையாளர்களையும் விவசாயிகளையும் கொந்தளிப்பில் ஆழ்த்தியுள்ளது. இந்நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன், மேட்டூர் அணை திறப்பு தொடர்பாக, தஞ்சையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், விவசாயிகள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தனர். ஆனால், அமைச்சர் பன்னீர்செல்வம், எந்த ஒரு கோரிக்கை தொடர்பாகவும் வாய் திறக்கவில்லை. 'பட்டுக்கோட்டையில் கருணாநிதி ஆட்சிக்காலத்தில் பல கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டு மூடிவைக்கப்பட்டுள்ள தென்னை வணிக வளாகத்தை திறக்க வேண்டும்' என, விவசாயி வீரசேனன் என்பவர் வலியுறுத்தினார். இக்கோரிக்கை குறித்தும் அமைச்சர் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. இதனால் விவசாயிகளின் கடும் கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளார் வேளாண்மைத்துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம். அமைச்சரின் இந்தச் செயல்களுக்கு உடனடியாக, அவர் மீது தமிழக முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பல தரப்பில் இருந்தும் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.





# மணல் குவாரி ஒப்பந்தம்

அ.தி.மு.க., ஆட்சியில் மணல் குவாரிகளுக்கு அனுமதி வழங்காததால், பல ஆறுகளில் வெள்ள நீரோட்டம் இருந்து வருகிறது. குவாரிகளை திறந்தால், மழை காலங்களில் நீரோட்டம் பாதிப்பதுடன், பிளாஸ்டிக் உள்ளிட்டவை தேங்கி, ஆறுகளின் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும்.இதை பற்றி கவலைப்படாமல், அ.தி.மு.க., ஆட்சியில் மணல் விற்பனையில் ஈடுபட்ட மூன்று 'மாபியா'க்களை அழைத்து, தன் வீட்டிலேயே ரகசிய ஒப்பந்தம் செய்துள்ளார். அதில் புதுக்கோட்டையை சேர்ந்த மணல் வியாபாரி கரிகாலனும் ஒருவர். அவரை தன் வீட்டிற்கு அழைத்து துரைமுருகனும் அவரது மகனும் வேலூர் எம்.பியுமான கதிர் ஆனந்தும் சேர்ந்து பட்டு சால்வை அணிவித்து கௌரவித்துள்ளனர்.

# அயோத்தியில் மசூதி



பகவான் ஸ்ரீராமர் பிறந்த புனித இடமான அயோத்தியில் உச்சநீதிமன்றத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பால் தற்போது பிரம்மாண்டமான ராமர் கோயில் கட்டும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில், உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி, அயோத்தியில் உள்ள தனிபூர் கிராமத்தில் மசூதி கட்டுவதற்கு, ஐந்து ஏக்கர் நிலத்தை உ.பி. அரசு ஒதுக்கியது. அங்கு ஒரு மசூதியும் மருத்துவமனையும் அமைக்கப்படவேண்டும்என்றும்உத்தரவிடப்பட்டது.சுன்னி வக்ஃப் வாரியம் அமைத்த இந்தோ இஸ்லாமிய கலாச்சார அறக்கட்டளை (ஐ.ஐ.சி.எஃப்) இதற்கான வரைபடத்தை வெளியிட்டது. அங்கு அமையவுள்ள மசூதிக்கு, பாபரின் பெயரை சூட்ட பெயர் வைக்க வேண்டாம் என்று ஐ.ஐ.சி.எஃப் அறக்கட்டளை முடிவெடுத்தது. அதனால், 1857ல் ஆங்கிலேயர்களை எதிர்த்து போராடிய அஹ்மதுல்லா ஷா பைசாபாடியின் பெயர் சூட்டப்படுகிறது. ஒரே நேரத்தில் சுமார் 2,000 பேருக்கு இடமளிக்கும் வகையில் இந்த மசூதி கட்டப்படுகிறது. மேலும், இத்திட்டத்தின் கீழ், 300 படுக்கைகள் கொண்ட சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, ஒரு சமூக சமையலறை, ஒரு ஆராய்ச்சி மையமும் கட்டப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறுமிக்கு உதவிய முதல்வர்



திரிபுரா அகர்தலாவின் புறநகர் பகுதியைச் சேர்ந்த உத்தம் தாஸ் என்பவரின் மகள் பர்ஷா. எட்டாம் வகுப்பு படித்துள்ள இந்த சிறுமி, 'அவரது தாய் கொரோனாவால் பாதிக்கப்பட்டு உள்ளார். எங்கள் குடும்பம் ஒற்றை அறை வீட்டில்தான் வசிக்கிறோம். படிக்க எழுத வீட்டில் ஒரு மேசை இல்லாததால் சிரமமாக உள்ளது. என் தந்தைக்கு போதிய வருமானம் இல்லை' என பா.ஜ.கவை சேர்ந்த அம்மாநில முதல்வர் பிப்லப் குமார் தேவுக்கு முகநூலில் தெரிவித்திருந்தார். இதனை அறிந்த முதலமைச்சர், உடனடியாக அந்த சிறுமிக்கு உதவும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். உடனடியாக படிக்கும் மேசை, மருந்துகள், மளிகை, உணவு பொருட்கள், சிறுமியின் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டன. முதல்வரின் உடனடி உதவி எங்கள் குடும்பத்துக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது என தெரிவித்துள்ளார் பர்ஷா.

# பசுவால் லாபம் ஈட்டும் கேரள அரசு

கேரள அரசுக்கு சொந்தமான ஆயுர்வேத மருந்து தயாரிப்பு நிறுவனம் ஔஷதி. பாரதத்தில் உள்ள பொதுத்துறை ஆயுர்வேத மருந்து தயாரிப்பு நிறுவனங்களின் பெரியதான இந்த ஔஷதி, மாட்டு சாணம், சிறுநீர், பால், நெய் மற்றும் தயிர் ஆகியவற்றால் தயாரிக்கப்படும் பஞ்சகவ்யா க்ருதம் எனும் மருந்தை விற்பனை செய்கிறது. இந்த பஞ்சகவ்ய கிருதம், மனநலம் சார்ந்த நோய்கள், மஞ்சள் காமாலை, காய்ச்சல், கை கால் வலிப்பு, கேன்சர், நினைவாற்றல், செறிமானம் உள்ளிட்ட பல்வேறு நோய்களை தீர்க்கும் குணம் கொண்டது என நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால், கேரளாவை ஆளும் கம்யூனிஸ்ட்டுகள், பசுவை கேலி செய்வது, கொன்றுத் தின்பது, ஹிந்துக்கள் பசுவை புனிதமாக்க் கருதி வணங்குவதை உள்ளிட்டவற்றை கேலி செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சார்பு ஊடகம் டுவிட்டர்

எப்போதும் இடதுசாரி சிந்தனையுடன் செயல்படுகிறது டுவிட்டர் என்பது உலகெங்கும் பரவலாக வைக்கப்படும் குற்றச்சாட்டு. அந்த நிறுவனம், சமீபத்தில் காலிஸ்தான் பயங்கரவாதி ஜர்னைல் சிங் பிந்த்ரான்வாலேவை பயங்கரவாதி என்று அழைத்த சில டுவிட்டர் கணக்குகளை முடக்கி வைத்து தன்மேல் வைக்கப்படும் குற்றச்சாட்டு உண்மைதான் என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளது. கடந்த 40 ஆண்டுகளில் 80,000 ஹிந்துக்களை காலிஸ்தான் பயங்கரவாதிகள் கொன்றுள்ளனர் என்று செய்தி பதிவிட்ட சிவம் என்பவரின் கணக்கு முடக்கப்பட்டது இதற்கு ஒரு உதாரணம். ஆனால், குடியரசு தினத்தன்று நடைபெற்ற சம்பவங்கள் அதற்கு வன்முறையாளர்கள் பயன்படுத்திய டுவிட்டர் கணக்குகளை இந்நிறுவனம் முடக்கவில்லை, மத்திய அரசு, பிரதமர், உள்துறை அமைச்சர் குறித்த தவறான தகவல்கள், அவதூறுகள் பதிந்தவர்களின் கணக்குகளை முடக்க பலமுறை அறிவுறுத்தப்பட்டும் டுவிட்டர் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், மத்திய அரசின் புதிய இணைய வழிகாட்டுதல்களுக்கு இணங்க டுவிட்டர் முயற்சிப்பதாகவும் அதற்கு நேரம் தேவை என்றும் டுவிட்டர் கோரிக்கை விடுத்துள்ளது.

---

# மன்னிப்பு கோரினார் ஹர்பஜன் சிங்




'புளூ ஸ்டார் ஆப்பரேஷன்' நடவடிக்கையின் 37 வது ஆண்டு விழாவை முன்னிட்டு, பிந்தரன்வாலே மற்றும் ஜர்னைல் சிங் உள்ளிட்ட காலிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு, ஹர்பஜன் சிங் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அஞ்சலி செலுத்தினார். தீவிரவாதிகளுக்கு அஞ்சலி செலுத்தியதோடு, அதில், பயங்கரவாதிகளை தியாகிகள் என ஹர்பஜன் சிங் குறிப்பிட்டது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. கடுமையான விமர்சனத்துக்கு உள்ளானது. இந்நிலையில், 'எனது இன்ஸ்டாகிராம் பதிவு பற்றி, தெளிவுபடுத்தி மன்னிப்பையும் கோர விரும்புகிறேன். வாட்ஸ் ஆப்பில் வந்த மெசேஜ் எதைக் குறிக்கிறது என்பதை உணராமல், அதனை பகிர்ந்து விட்டேன். அது எனது தவறு. நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். நான் பதிவிட்ட புகைப்படங்களில் இருப்பவர்களை நான் எந்த கட்டத்திலும் ஆதரிக்கவில்லை. நான் ஒரு சீக்கியர். நான் பாரதத்திற்காக போராடுபவன். எதிரானவன் அல்ல. தேசத்தின் உணர்வை புண்படுத்தியதற்காக, நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். உண்மையில், எனது தேசத்திற்கு எதிரான எந்த குழுவையும் நான் ஒரு போதும் ஆதரிக்க மாட்டேன். எனது நாட்டிற்காக, கடந்த 20 ஆண்டுகள், ரத்தத்தையும் வியர்வையும் சிந்தியுள்ளேன். ஜெய்ஹிந்த்.' என தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவர் தனது பகிரங்க மன்னிப்பை தெரிவித்துள்ளார்.

# வங்கிகளுக்கு அபராதம்

வங்கிகளில் நடக்கும் கடன் மோசடிகளை தடுக்க ரிசர்வ் வங்கி கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து கணக்குகளைத் தீவிரமாக ஆய்வு செய்து வருகிறது. இந்நிலையில் விதிமுறைகள் மீறுதல் மற்றும் மோசடி ஆகியவற்றின் கீழ் தவறுகளைச் செய்துள்ள பேங்க் ஆப் இந்தியா மற்றும் பஞ்சாப் நேஷனல் வங்கி ஆகியவற்றின் மீது ரிசர்வ் வங்கி சுமார் 6 கோடி ரூபாய் அபராதம் விதித்துள்ளது. மார்ச் 31, 2019ஆம் முடிவின் போது சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கைகள், ஜனவரி 1, 2019ல் சமர்ப்பிக்கப்பட்ட பிராடு மானிட்டரிங் ரிப்போர்ட் (FMR) அறிக்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு நடத்தியதில் இந்த வங்கிகள், பணப் பரிமாற்ற லிமிட், DEA நிதி தாமதமான பணப் பரிமாற்றம், கடன் மோசடி குறித்துத் தாமதமாக ரிசர்வ் வங்கிக்குத் தகவல் அளித்தல், போலியான சொத்துக்களை விற்பனை செய்தல் எனப் பல விதிமீறல்கள், ஒழுங்குமுறை இணக்கம் இல்லாமை, வாடிக்கையாளர்கள் உடன் செய்யப்பட்ட பணப் பரிமாற்றம் ஒப்பந்தம் மீறல் கண்டுபிடிக்கப்பட்டதால் இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.



# பரப்பப்படும் போலி செய்தி

சமூக வலைத்தளங்களில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா உத்தரப் பிரதேச முதல்வர் ஆதித்யநாத்துக்கு கடிதம் எழுதியதாக ஒரு கடிதம் தற்போது பரப்பப்பட்டு வருகிறது. அந்த கடிதம் ஜூன் 4 தேதியிட்டு வாட்ஸ் ஆப், பேஸ்புக், டிவிட்டர் போன்ற சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்டு வருகின்றது. அந்த கடிதத்தில் அமித் ஷா, கொரோனா தொற்றின் 2ம் அலையைக் கையாண்டமுறை குறித்து உ.பி முதல்வரைப் பாராட்டியும் உ.பியின் மேற்கு பக்கம் இன்னும் அதிகம் பேருக்குத் தடுப்பூசியைச் செலுத்தவும் அறிவுறுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 2022ல் நடைபெற உள்ள உ.பி தேர்தலில் வெற்றிபெற இது உதவும் என்ற வகையில் செய்தி உள்ளது. 'மத்திய உள்துறை அமைச்சர் அதுபோன்ற ஒரு கடிதத்தை எழுதவில்லை, அது போலியானது. மக்கள் இதுபோன்று போலி செய்திகளை நம்பவேண்டாம். இது போன்று வரும் செய்திகளை அரசாங்க அதிகாரப்பூர்வ வலைத்தளங்களில் சரிபார்க்க வேண்டும்' என மத்திய அரசு டுவிட்டரில் செய்தியை வெளியிட்டுள்ளது.



# சீன தடுப்பூசிகளை அங்கீகரிக்காத சௌதி



கொரோனா வைரஸ் தொற்று பரவலையடுத்து பல்வேறு நாடுகள் தடுப்பூசி செலுத்தியவர்களை மட்டுமே தங்கள் நாட்டிற்குள் அனுமதிக்கின்றன. அவ்வகையில், சௌதி அரேபியாவும் அதேபோல அறிவித்துள்ளது. ஆனால், சீன தடுப்பூசிகளை செலுத்திக்கொண்டவர்களை தங்கள் நாட்டிற்குள் நுழைவதற்கு சௌதி தடை விதித்துள்ளது. உலக சுகாதார அமைப்பால் இரண்டு சீன தடுப்பூசிகளும் அங்கீகரித்த போதிலும், சில வளைகுடா நாடுகள் இந்த சீன தடுப்பூசிகளை அங்கீகரிக்கவில்லை. இது குறிப்பாக பாகிஸ்தானுக்கு புதிய சிக்கலை உருவாக்கியுள்ளது. ஏனெனில் அதன் குடிமக்களில் பெரும்பாலோர் சீனாவின் சினோவாக் மற்றும் சினோபார்ம் தடுப்பூசிகளைத்தான் செலுத்திக் கொண்டுள்ளனர். பாகிஸ்தானின் திட்டமிடல், மேம்பாட்டுத்துறை அமைச்சர் அசாத் உமர், ஹஜ், வேலை அல்லது கல்விக்காக சௌதி அரேபியாவுக்குச் செல்ல வேண்டிய பாகிஸ்தானியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஒரு மாதத்திற்குள் ஃபைசர் தடுப்பூசிகள் செலுத்தப்படும் என்று கூறியுள்ளார். சீன தடுப்பூசி சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படாதது உலகளாவிய பிரச்சினைக்கு வழிவகுக்கும் என்றும் அவர் கூறியிருந்தார். மலேஷிய அரசும் இதே பிரச்சனையை எதிர்கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# கூகுளின் ஏகபோகம் பிரான்ஸ் கண்டிப்பு

அமெரிக்காவில் இருந்து செயல்படும் பல முன்னணி டிஜிட்டல் சேவை நிறுவனங்கள் தற்போது டிஜிட்டல் சேவை வரி, ஏகபோக ஆதிக்கம் என உலக நாடுகளில் அடுத்தடுத்துப் பிரச்சனைகளில் சிக்கி வருகிறது. இந்நிலையில் தற்போது பிரான்ஸ் நாட்டின் வர்த்தகப் போட்டி எதிர்ப்பு அமைப்பு கூகுள் மீது சுமார் 220 மில்லியன் யூரோ அளவிலான தொகையை அபராதமாக விதித்துள்ளது. 'பிரான்ஸ் நாட்டில் கூகுள் தனது ஆன்லைன் விளம்பர வர்த்தகத்தில் மிகப்பெரிய அளவில் ஆதிக்கம் செலுத்திவருகிறது. தனது ஆதிக்கத்தைத் தவறாகப் பயன்படுத்திக்கொண்டுள்ளது. கூகுள் நிறுவனம் தனது சக போட்டி நிறுவனங்கள் அதாவது குறிப்பிட்ட வர்த்தகச் சந்தையில் இருக்கும் நிறுவனங்கள், மொபைல் சைட் மற்றும் அப்பிளிகேஷன் வைத்துள்ளோர் மீது அபராதம் விதித்து வருகிறது. இது ஒருபோதும் ஏற்க முடியாது. கூகுள் ஆதிக்கம் செலுத்தும் காரணத்தால் பிற நிறுவனங்களைக் குறைந்து மதிப்பிடக்கூடாது' என பிரான்சின் வர்த்தகப் போட்டி எதிர்ப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. இதற்குக் கூகுள் நிறுவனம் எவ்விதமான எதிர்ப்பையும் தெரிவிக்காமல், அபராத தொகையை முழுமையாகச் செலுத்துவதாக அறிவித்துள்ளது.

சில மாதங்களுக்கு முன்பு நமது மத்திய அரசு வெளிநாட்டு இண்டர்நெட் நிறுவனங்கள் பாரதத்தில் செய்யும் வர்த்தகம், சேவை மூலம் கிடைக்கும் வருமானத்திற்கு 'டிஜிட்டல் சேவை வரி' விதிக்க முடிவு செய்தது, மத்திய அரசின் இந்த முடிவை எதிர்த்து அமெரிக்க அரசு பாரதத்திற்கு எதிராக வரி விதித்தது. மேலும், ஆஸ்திரியா, இத்தாலி, ஸ்பெயின், துருக்கி, பிரிட்டன் ஆகிய நாடுகள் மீதும் டிஜிட்டல் சேவை வரி விதிப்பிற்கு எதிராக வரியை விதித்தது. அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு எதிராக பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பு (OECD) தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளது. ஜி 7 மாநாட்டில் இணைய நிறுவன்ங்கள் மீதான மற்ற நாடுகளின் வரிவிதிப்பிற்கு இங்கிலாந்து ஆதரவு தெரிவித்துள்ளது. இதனால், 180 நாட்களுக்கு இந்த வரியை ரத்து செய்துள்ள அமெரிக்கா, இதில் ஒரு சுமூக தீர்வை எட்டுவதில் தீவிரமாக உள்ளது.

# பிர்சா முண்டா



'பிர்சா' என்றால் வியாழன், 'முண்டா' என்றால் ஆதிவாசி என்று பொருள். 1875 ம் ஆண்டு அன்றைய பீகார் மாநிலத்தில் தந்தை சுக்ணா முண்டா, தாய் கர்மிஹட்டு முண்டாவுக்கு மகனாகப் பிறந்தார் பிர்சா முண்டா. அன்றைய காலகட்டத்தில் ஆங்கிலேயப் படையால் பாரதத்தில் பழங்குடி மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டது. ஆங்கிலேய அரசாங்கம் "காடுகளின் ஒவ்வொரு சதுர அடியும் பிரிட்டிஷ் அரசுக்கே சொந்தம்" எனும் சிறப்புச் சட்டத்தையும் கொண்டு வந்தது. அப்போது, பழங்குடி மக்களின் உரிமைப் போராட்டத்திற்காக எழுந்த முதல் குரல் பிர்சா முண்டாவுடையதே.

ஆங்கிலேய சட்டத்தை எதிர்த்தார் பிர்சா முண்டா. "நீர் நமது, நிலம் நமது, வனம் நமது" எனும் கோஷத்தை எழுப்பி பழங்குடி மக்களிடம் சுதந்திர உணர்வை ஏற்படுத்தினார். 1895ல் நடைபெற்ற இந்தப் போராட்டத்தின்போது பிர்சா முண்டாவின் வயது 19தான். அதுவே பழங்குடிகள் வரலாற்றின் முதல் போராட்டம். பண்ணையார்கள், ஜமீன்தார்கள் உதவியுடன் ஆங்கிலேய அரசு பழங்குடி மக்களின் நிலங்களைப் பறித்தபோது "ஒரு குரலைவிட, ஒட்டு மொத்த மக்களின் குரலே அதிகாரத்தை அசைக்கும்" என முழங்கி, பழங்குடி மக்களை ஒன்று சேர்த்து படை திரட்டிப் போராடினார் பிர்சா முண்டா.

இதனால் பழங்குடிகள் இவரை `தார்தி அபா' என்று அழைத்தனர். `மண்ணின் தந்தை' என்று இதற்கு பொருள். பிரிட்டிஷ் படையை எதிர்த்து, கொரில்லா போர் முறையில் வில், அம்புகளை மட்டுமே கொண்டு எதிரிகளை வீழ்த்தினார் பிர்சா முண்டா. இந்தப் போராட்டத்துக்கு `உல்குலான்' என்று பெயர்.

ஆங்கில படையை எதிர்த்துப் போராடிய குற்றத்துக்காக பிர்சா முண்டா கைது செய்யப்பட்டார். 1900 ஜூன் 9ம் தேதியன்று காலரா நோயால் அவர் இறந்ததாக அறிவித்தது ஆங்கிலேய அரசு. அப்போது அவருக்கு வயது 25 மட்டுமே. நமது நாடாளுமன்றத்தில் இருக்கும் ஒரே பழங்குடி இனப் போராளியின் படம் பிர்சா முண்டாவினுடையது என்பது குறிப்பிடத்தக்கது.

`மண்ணின் தந்தை' பிர்சா முண்டாவின் நினைவு தினம் இன்று.


விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க
www.vijayabharatham.org
என்ற இணையதளம் அல்லது
044 - 26420870 என்ற தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும்